வெருகல் பிரதேச சபை

திருகோணமலை மாவட்டம்

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூலை 28 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 28 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 நவம்பர் 12 ஆம் திகதி சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வெருகல் பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்களின் கூற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு சமர்ப்பிக்கப்படவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 3 படி நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) போட்டோ பிரதி இயந்திரம், கணனி என்பவற்றை திருத்தம் செய்வதற்காகவும் பெயின்ற் கொள்வனவு செய்வதற்காகவும் செலவு செய்யப்பட்ட ரூபா 142,275 கூட்டு மொத்த தொகை மூலதன செலவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) கூட்டுப்பசளை பீப்பாய்கள் கொள்வனவு தொடர்பாக ஒரு தனியார் நிறுவனத்திற்கு ரூபா 198,475 செலுத்த வேண்டி இருந்த போதிலும் செலுத்த வேண்டியதாக ரூபா 498,475 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டதனால் செலுத்த வேண்டிய பணம் ரூபா 300,000 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

1.3.4 பெறப்பட வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 47,954 கூட்டுத் தொகையான நான்கு சில்லறைக் கடன் கொடுத்தோர் மீதிகள் கொடுத்து தீர்க்கப்படாது ஏழு வருட காலமாக நிலுவையாகக் காணப்படுகின்றன.

(ஆ) கல் அமுக்கி (சுழயன சுழடடநச) இயந்திரத்தை வாடகைக்கு வழங்கிய வகையில் 2012, 2013 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 121,000 கூட்டுமொத்தத் தொகையை அறவிடுவதற்கு 2015 செப்டம்பர் 09 திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2009 ஆம் ஆண்டு தொடக்கம் வருமதியாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,818,827 கூட்டு மொத்த தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| காணிகளும், கட்டிடங்களும் | 33,684,089 | நிலையான சொத்துப் பதிவேடு, |
| மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் | 7,425,137 | |
| பொதுக் களஞ்சிய இருப்பு | 22,500 | மெய்மையாய்வுச் சபை அறிக்கை |
| வருமான கடன்பட்டோர் | 2,949,852 | உறுதிப்படுத்தல் கடிதம். |
| கடன் கொடுத்தோர் | 1,852,014 | கடன் கொடுத்தோர் பதிவேடு |

1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) மாகாணநிதி ஒழுங்கு விதி | |
| (i) விதி இலக்கம் 237 | நான்கு வருடங்களுக்கு முன்னர் சபையால் வழங்கப்பட்ட ரூபா 28,171 கூட்டு மொத்த பெறுமதியான பத்து காசோலைகளைப் பணமாக மாற்றுவதற்கு வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத |

போதிலும் அவை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(டை) விதி இலக்கம் 432.1 — 2014 ஆம் ஆண்டு ஏழு வாகனங்கள் திருத்தத்திற்காக ரூபா 272,820 செலவு மேற்கொண்டிருந்த போதும் வாகன சம்பவ குறிப்பு புத்தகத்தில் அவை பதியப்படவில்லை.

2 நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் படி 2014 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா 792,361 ஆகும். இதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 2,518,976 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 1,726,615 பின்னடைவைக் காட்டுகின்றது.

2.2 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளவாறான வருமானம், வருமான நிலுவை என்பன

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டுக்கான மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், வருமான நிலுவை என்பவற்றுக்கான தகவல் கீழே தரப்படுகின்றன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | திரண்ட நிலுவை 31.12.2014 |
| --- | --- | --- | --- |
| | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரிகளும் வரிகளும் | 332,050 | 295,775 | 36,275 |
| வாடகைகள் | 730,800 | 431,420 | 299,380 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 10,803,000 | 52,690 | 1,027இ610 |
| ஏனைய வருமானம் | 460,700 | 1,097,108 | - |
| | 12,326,550 | 1,876,993 | 1,363,265 |

3. செயற்பாட்டு மீளாய்வு

2.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையின் ஊழியர்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் செலுத்த வேண்டிய ரூபா 594,724 கூட்டுத் தொகை கொடுத்துத் தீர்க்கப்படாது 2008 தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையான வீச்சுடைய காலமாக செலுத்த வேண்டிய முற்பணக் கணக்கில் காட்டப்பட்டு வருகின்றது.

(ஆ) 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் தொடக்கம் 2014 திசெம்பர் மாதம் வரை வாசகர்களுக்கு வழங்கப்பட்ட 87 நூலகப்புத்தகங்களை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
42 அங்கத்தவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அங்கத்துவப் படிவங்கள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக புத்தகங்களை திருப்பி ஒப்படைக்காத வாசகர்கள் பற்றிய சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

3.2 வருமான நிர்வாகம்

மீளாய்வாண்டிற்கான அறவிட வேண்டிய ரூபா 26,250 தொகையான முத்திரைத் தீர்வையானது கணக்காய்வுத் திகதியான 2015 செப்டம்பர் 09 ஆம் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

3.3 ஒப்பந்தக் நிர்வாகம்

(அ) சிறுவர் பூங்கா நிர்மாணம்

2013 ஆம் ஆண்டு நடைபெற்ற தெயட்ட கிருள நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 7,072,527 பெறுமதிக்கு சிறுவர் பூங்கா ஒன்றினை நிர்மாணிப்பதற்காக வெருகல் பிரதேச சபையால் 2013 சனவரி 16 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உடன்படிக்கையின் படி நிர்மாண வேலைகள் 2013 மார்ச் 01 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் காணக்காய்வுத் திகதியான 2015 செப்டம்பர் 09 ஆம் திகதி வரை ஓப்பந்த வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒப்பந்தக்காரரால் பிரதான வாயில் கதவு நிர்மாணிக்கப்படாதும் பூங்காவிற்காக உபகரணங்கள் வழங்கப்படாதும் காணப்பட்ட போதிலும் அவை திருப்திகரமாக பூர்த்தி செய்யப்பட்டதென சான்றுபடுத்தப்பட்டு ஒப்பந்தக்காரருக்கு ரூபா 1,951,338 கூட்டுத் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

3.4 பயன்படுத்தப்படாமல் உள்ள சபையின் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான ரூபா 500,000 பெறுமதியுடைய நான்கு சக்கர உழவு இயந்திரங்கள் இரண்டும், இரண்டு சக்கர உழவு இயந்திரம் ஒன்றும் திருத்தம் செய்து பயன்படுத்தப்படாமல் 05 வருட காலமாக காணப்படுகின்றது.

(ஆ) சபைக்குச் சொந்தமான ரூபா 2,272,800 பெறுமதிக்கு காட்டப்பட்ட 07 கடைகளைக் கொண்ட கடைத்தொகுதியை 2011 ஆம் ஆண்டு தொடக்கம் வாடகைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது கணக்காய்வுத் திகதியான 2015 செப்டம்பர் 09 வரை விளைவற்றுக் காணப்பட்டது.

3.5 மனிதவள முகாமைத்துவம்

2014 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| நிறைவேற்றுனர் | 01 | -- | 01 | -- |
| உதவியாளர்கள் | 15 | 12 | 03 | -- |
| சிற்றூழியர்கள் | 30 | 13 | 17 | -- |
| ஏனையவர்கள் | -- | 33 | -- | 33 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதி விசேட முகாமைத்துவ தரம் ஐ பதவிக்கான ஒரு வெற்றிடமும் முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான மூன்று வெற்றிடங்களும் கடந்த 05 வருட காலமாக நிரப்பப்படாமல் வெற்றிடமாக உள்ளன.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(இ) முற்பணங்களின் அறவீடு
(ஈ) வருமான சேகரிப்பு
(உ) பெறுகை நடைமுறை
(ஊ) ஒப்பந்த நிர்வாகம்